அன்றன்றுள்ள அப்பம் வழங்கும்

# ஒலிவமரக் கன்றுகள்

மார்ச் - 2026 | மரம் - 5 | கன்று - 3 | ஆண்டு சந்தா ரூ. 250/- | தனிப்பிரதி ரூ. 25/- | ஆயுள் சந்தா ரூ. 2500/-




## உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக.

மத்தேயு 22:39

ஆசிரியர்: J. ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை

# மனம் விட்டு உங்களுடன்...



கிறிஸ்துவுக்குள் எனக்குப் பிரியமான செல்லப்பிள்ளைகள் மற்றும் அவர்களுக்கு வேத வசனக் கதைகளை எடுத்துச் சொல்லி தேவனுக்குள் வளர்த்தெடுக்கும் பெரியோர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள். ஒலிவமரக் கன்றுகள் இதழ் வழியாக உங்களை சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

''தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்'' (யோவான் 3:16).

அன்பு நம்முடைய வாழ்க்கையில் முக்கியமானது. தன்னிடத்தில் அன்பாய் இருப்பவர்களிடம் அன்பாய் இருப்பது மனித சுபாவம். ஆனால் இயேசுவின் அன்பு உண்மையானது, நிலையானது, நிபந்தனையற்றது. இயேசு உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள் என்று கூறியபின்பு உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள் (மத்தேயு 5:44) என்று கூறினார். சிலுவையில் இயேசு தன்னைத் துன்புறுத்தியவர்களுக்காக ஜெபித்தார் (லூக்கா 23:34). இயேசுகிறிஸ்து அன்புக்கு மாதிரியாகத் திகழ்ந்தார்.

இயேசுகிறிஸ்து நம்மீது வைத்த அன்பினால் தம் கைகளையும் கால்களையும் ஆணிகள் துளைக்க அனுமதித்தார். தலையில் முள்முடி சூட்டவும், சிலுவையில் அறையப்பட்டு உயிர்துறக்கவும் தன்னை ஒப்புக்கொடுத்து தியாக பலியானார். அன்பினால் அடிமையின் ரூபத்தை ஏற்றதால்தான் அத்தனை அவமானங்களையும் ஏற்றுக்கொண்டார்.

இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே இவ்வுலகில் வந்தார். நம்முடைய பாவத்தினால் உண்டாகும் குற்ற உணர்ச்சியிலிருந்தும், தண்டனையிலிருந்தும் நம்மை இரட்சிக்கவே நம்மேல் வைத்த அன்பின் நிமித்தம் இவ்வுலகில் வந்தார். வழிதப்பிப் போகிறதான நிலையிலிருந்தும், கர்த்தரைவிட்டு தூரம் போகிறதினால் உண்டாகும் ஆபத்திலிருந்தும் நம்மை இரட்சிக்கிறார்.

நம்மைத் தேடிவந்த இயேசுவுக்கு நம் உள்ளத்தைக் கொடுக்கும்போது தீயகாரியங்கள் நம்மைவிட்டு அகன்றுபோகும். அன்பு நம் உள்ளத்தில் மலரும் போது நாம் விரும்புகின்ற அன்பை பிறருக்கு நம் வாழ்வின் வழியாகக் கொடுக்க கர்த்தர் துணைபுரிவார்.

''மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்'' (பிலிப்பியர் 2.8).

இயேசு தம்மை ஜீவபலியாக ஒப்புக்கொடுத்ததால் தேவன் அவரை உயர்த்தினார். நம்மீது அன்புகொண்டு நமக்காக உயிரைத்தந்து நம்மை மீட்ட இயேசுவின் அன்பு எத்தனை உயர்ந்தது.

இயேசுகிறிஸ்துவின் வழியில் நடக்கிற நாமும் அவரைப்போல ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துவோம். அதன்வழியாய் இறைவனின் அன்பு பிள்ளைகளாக வாழ கர்த்தர் நமக்குத் துணைபுரிவாராக. ஆமென்.



அன்புடனும், அக்கறையுடனும்:

*அங்கிள்.* **J. ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை**

# கம்பு

''அவன் அதை மேலாக நிரவினபின்பு, அததற்கேற்ற இடத்தில் உளுந்தைத் தெளித்து, சீரகத்தைத் தூவி, முதல்தரமான கோதுமையையும் தெரிந்துகொண்ட வாற்கோதுமையையும் கம்பையும் விதைக்கிறான் அல்லவோ?'' (ஏசாயா 28:25).

கர்த்தர் சர்வ வல்லவர்; அவர் ஆச்சரியமான ஆலோசனைகளைத் தருகிறவர்; அவர் உண்மையான ஞானம் உடையவர். (வாசிக்க: ஏசாயா 28:24-29) எல்லா நேரத்திலும் ஒரு விவசாயி உழுதுகொண்டிருப்பதில்லை. ஒரு விவசாயி பூமியைத் தயார் செய்து, பிறகு விதைகளை விதைக்கிறான். விவசாயி பல்வேறு வழிகளில் பல்வேறு விதைகளைத் தூவுகிறான். ஒரு விவசாயி உளுந்தைத் தூவுகிறான். சீரகத்தைப்போடுகிறான். வரிசைகளில் கோதுமையை விதைக்கிறான், வாற்கோதுமையை அதற்குரிய சிறப்பான இடத்தில் தூவுகிறான், கம்பை வயலின் ஓரங்களில் விதைக்கிறான். நமது தேவன் உங்களுக்கு ஒரு பாடத்தைக் கற்பிக்க இதைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். தேவன் தன் ஜனங்களைத் தண்டிக்கும்போது, அவர் நீதியாக இருக்கிறார் என்பதை இந்த உதாரணம் காட்டும். ஒரு விவசாயி உளுந்து தாலத்தாலே போரடிக்கச் செய்வானா? செய்யமாட்டான். ஒரு விவசாயி சீரகத்தின் மேல் வண்டியின் உருளையைச் சுற்றவிடுவானா? இல்லை. உளுந்தைக் கோலினாலும் சீரகத்தை மிலாற்றினாலும் அடிப்பான். ஒரு பெண் அப்பம் செய்யும்போது, மாவைப் பிசைந்து கையால் அழுத்துவாள். ஆனால் அவள் இதனை எப்பொழுதும் செய்யமாட்டாள். கர்த்தர் இதே வழியில் தன் ஜனங்களைத் தண்டிக்கிறார். அவர் வண்டிச் சக்கரத்தால் அவர்களைப் பயமுறுத்துவார். ஆனால் அவர் முழுமையாக நசுக்குகிறதுமில்லை. அவர் பல குதிரைகள் அவர்களை மிதிக்க விடுகிறதுமில்லை. இப்படி இந்த பாடம் சர்வ வல்லமையுள்ள கர்த்தரிடமிருந்து வருகிறது. கர்த்தர் ஆச்சரியகரமான ஆலோசனைகளைத் தருகிறார். தேவன் உண்மையான ஞானம் உடையவர்.



இந்த மாதம் கம்பைக் குறித்துப் பார்ப்போம்.

**கம்பு** (Pennisetum glaucum, Pearl Millet) ஒரு தானியம் ஆகும். கம்பானது பச்சை மற்றும் வெண்மை கலந்த ஒரு புன்செய் நில சிறுதானிய பயிராகும். பொதுவாக ஆப்பிரிக்கக் கண்டத்தில் இது தோன்றியதாக கருதப்படுகிறது. அதிகமாகப் பயிரிடப்படும் சிறுதானியங்களில் கம்பு முதலிடத்தை பிடிக்கிறது. ஏறத்தாழ 40-க்கும் மேற்பட்ட நாடுகளில் கம்பு உணவுப் பொருளாக பயன்படுத்தப்படுகிறது. குறிப்பாக ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில் கம்பு மனிதர்களுக்கு உணவாகவும், கால்நடைத் தீவனமாகவும், எரிபொருளாகவும் பயன்படுத்தப்படுகிறது.

இந்தியாவில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சிகளில், கம்பு 2000 ஆண்டுகளுக்கு முன்பே இந்தியாவிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது தெரியவருகிறது. கம்பு வறட்சியையும் தாங்கிக்கொண்டு வளரும் சிறுதானிய பயிராகும். எனவேதான் நீர்வளர்ச்சி இல்லாத பெரும்பாலான கிராமப்புறங்களில் கம்பு பிரதான பயிராக வளர்க்கப்படுகிறது. அதிக தட்பவெப்ப சூழலிலும், குறைவான ஊட்டமுள்ள நிலங்களிலும் கூட வளரும் தன்மை உடையது.

மானாவாரியாகவும், நீர்ப்பாசனத்திலும் கம்பு பயிராகும். இதன் விளைச்சல் காலம் 3 முதல் 4 மாதங்கள் ஆகும். கம்பு எல்லா வகை மண்ணிலும் விளையும் தன்மையுடையது. இது 0.5 - 4 மீட்டர் வரை வளரும்.

உலகம் முழுவதும் 260,000 கி.மீ. பரப்பளவில் பயிரிடப்பட்டு வருகிறது. இது உலகின் மொத்த உற்பத்தியில் சுமார் 50% பங்கைக் கொண்டுள்ளது. கம்பு உற்பத்தியில் இந்தியா உலகளவில் முதலிடத்தில் உள்ளது. ராஜஸ்தான் இந்தியாவில் அதிக உற்பத்தி செய்யும் மாநிலமாக உள்ளது. இந்தியாவில் உருவாக்கப்பட்ட முதல் கலப்பு கம்பு 1965இல் பயிரிடப்பட்டது.

இந்தியாவிற்கு அடுத்தபடியாக அதிக அளவு கம்பு உற்பத்தி செய்யும் இடமாக ஆப்பிரிக்கா உள்ளது. இந்த இழந்த பயிர் மீண்டும் கொண்டு வருவதில் ஆப்பிரிக்கா உண்மையில் வெற்றி பெற்றுள்ளது. வடக்கு நைஜீரியாவில் பால் மற்றும் அரைக்கப்பட்ட கம்பு பயன்படுத்தி தயாரிக்கப்படும் பானம் அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது.

தொன்று தொட்டுக் கம்பில் செய்யப்பட்டு வருவது கம்பஞ்சோறு ஆகும். கம்பங்கூழ், கம்பு ஊறவைத்த நீர் ஆகியவையும் கம்பின் பழைய உணவு வகைகள். கம்பானது கூழ், கம்பங்களி, பணியாரம், உப்புமா, இட்லி, தோசை, கஞ்சி, அடை தோசை மற்றும் தின்பண்டங்கள் (முறுக்கு, லட்டு, பிஸ்கட்) போன்றவற்றை தயாரிக்கப் பயன்படுகிறது.

கம்பு தானியத்தில் அதிகமான அளவில் புரதம், கால்சியம், பாஸ்பரம், இரும்புச் சத்து, ரைபோபுளோவின், நயாசின் சத்துக்கள், வைட்டமின்கள், தாது உப்புகள் , மாவுச்சத்து, பி 11 வைட்டமின், கரோட்டின், லைசின் போன்ற அமிலங்கள் என பல உயிர்ச்சத்துகள் உள்ளதால் உணவுச் சத்து தரத்தில் முதலிடம் வகிக்கிறது.

100 கிராம் கம்பில், 42 மில்லி கிராம் கால்சியம் சத்து உள்ளது. 11 முதல் 12 மில்லி கிராம் இரும்புச்சத்து உள்ளது. பி11 வைட்டமின் சத்து 0.38 மில்லி கிராம் உள்ளது. ரைபோபிளேவின் 0.21 மில்லி கிராம் உள்ளது. நயாசின் சத்து 2.8 மில்லி கிராம் உள்ளது. வேறு எந்தத் தானியத்திலும் இல்லாத அளவு 5 சதவிதம் எண்ணெய் உள்ளது. இந்த எண்ணெயில் 70 சதவிதம் பலப்படி நிறைவுறாக் கொழுப்பு அமிலம் உள்ளது. இது உடலுக்கு மிகவும் உகந்த கொழுப்பு ஆகும்.

நன்கு உலர வைத்த கம்பு தானியம் சுமார் 3 முதல் 6 மாதங்கள் வரை கெடாமல் இருக்கும். பின்னர் மீண்டும் ஒருமுறை வெயிலில் காயவைத்து எடுத்து வைத்தால் மேலும் 6

மாதங்கள் கெடாமல் இருக்கும். நொச்சி இலையை கம்புடன் கலந்து சேமித்தால், பூச்சி தாக்குதல் கட்டுப்படும்.

கம்பின் மருத்துவ குணங்கள் :

✸ தென் இந்தியாவில் இன்றளவும் கிராமங்களில் அதிக அளவு பயிரிடப்படுகிறது. நம் முன்னோர்களால் அதிகமாக பயிரிடப்பட்ட உணவு தானியங்களில் கம்புக்கு பிரதான இடம் உண்டு, வெயில் காலங்களில் கம்பினால் செய்யப்பட்ட கூழ் இன்றளவும் சிறு நகர்ப்புறங்களில் விற்பனை செய்யப்படுகிறது. வெயிலுக்கு இதமாகவும் நன்கு ஜீரண சக்தியையும் அளிக்கிறது.

✸ சர்க்கரை நோயாளிகளுக்கு கம்பு மிகசிறந்த உணவு பொருளாகும். ரத்தத்தில் சக்கரையின் அளவை கட்டுக்குள் வைப்பதில் கம்பு முக்கிய பங்காற்றுகிறது.

✸ அதிக அளவு கனிமங்கள்,சுண்ணாம்பு சத்து, புரதம் நிறைந்த உணவு பொருளாகும், அரிசியை விட 8% இரும்புசத்து நிறைந்து காணப்படுகிறது.

✸ உடல் எடையை கட்டுப்படுத்தும். நீண்ட நேரம் பசி இல்லாமல் வைத்திருக்கும்.

✸ குடல்புண், வயிற்றுப்புண், வாய்ப்புண் நீக்கும் தன்மை உடையது.

✸ கம்பு கண் நரம்புகளுக்கு புத்துணர்வு தந்து சீரான கண்பார்வை கிடைக்க உதவுகிறது.

✸ உடலுக்கு நன்கு வலிமை தரும் சத்துக்கள் இதில் காணப்படுகிறது. இதனால் வலிமை குறைந்த குழந்தைகளுக்கு இந்த கம்பு உணவு கொடுக்கும் பொழுது அவர்கள் நன்கு உடல் வளர்ச்சி அடைய உதவுகிறது.

✸ அதுபோல் வெயிலில் அதிகம் அலைகிறவர்கள், கடின வேலை செய்பவர்கள் புத்துணர்வு பெற கம்பு உதவுகிறது.

✸ மனச் சோர்வு இருந்தால் உடல் சோர்வு உண்டாகும்.

✸ கம்பு மற்ற தானியங்களைக் காட்டிலும் வைட்டமின் அதிகமாக இருப்பதால் வைட்டமின் சத்துக் குறைவால் உடலில் தோன்றும் வியாதிகளை இதை உண்பதன் மூலம் சரி பண்ணலாம்.


✸ தானியங்களிலேயே அதிக அளவாக 11.8 சதவீதம் புரோட்டீன் கம்பில்தான் உள்ளது. ஆரோக்கியமான தோலிற்கும், கண்பார்வைக்கு முக்கிய சத்தான வைட்டமின் ''ஏ''வை உருவாக்குவதற்கு முக்கிய காரணியான பீட்டா கரோட்டீன் கம்பு பயிரில் அதிக அளவில் உள்ளது.

அரிசியை விட கிட்டத்தட்ட எட்டு மடங்கு அதிக இரும்புச் சத்து கம்பு தானியத்தில் உள்ளது. தமிழகத்தில் நெல், கோதுமை, சோளத்துக்கு அடுத்தபடியாக பயிடப்படும் உணவு பயிர் கம்பு ஆகும். நம் முன்னோர்கள் அதிகப்படியாக பயிரிட்டு, உண்ட உணவு தானியம் கம்பு ஆகும். மற்ற தானியங்களை காட்டிலும் உடலுக்கு அதிக ஊட்டச்சத்து அளிக்கக்கூடிய உணவுப்பொருள் இது. தற்காலத்தில் கம்பை உணவு பொருளாக பயன்படுத்தாததற்கு காரணம் கம்பை உணவாக்குவதற்கு நிறைய நேரமும் உழைப்பும் செலவிடவேண்டிவரும் என்பதுதான் காரணம்.

எனவே இன்றைய தலைமுறையின் உடல்வளத்தை பேணிக்காப்பதற்காக கோவையிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் உடனடி கம்புசாதக் கலவை (ரெடிமேட் பேக்) உருவாக்கி அதற்கு காப்புரிமை பெற்றுள்ளது.

**தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார். அது மிகவும் நன்றாயிருந்தது. சகலத்தையும் உண்டாக்கினவருக்கு நன்றி.**

## “நீ கோடாகோடியாய்ப் பெருகுவாயாக” தொடர்புடைய சொற்களை கண்டு வட்டமிடுக. (வாசிக்க: ஆதி. 24:25-67)



தாதி
குடம்
துரவு
பொன்
சீமான்
சாராள்
தீவனம்
கழுதை
ஈசாக்கு

லாபான்
வெள்ளி
ஒட்டகம்
தியானம்
பிரயாணம்
ரெபெக்காள்
பெத்துவேல்
வைக்கோல்
லகாய்ரோயீ

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சா | க | ழு | தை | பெ | த் | து | வே | ல் | பொ |
| ஈ | சா | க் | கு | ரெ | பெ | க் | கா | ள் | ன் |
| தா | பி | ர | யா | ண | ம் | வை | க் | கோ | ல் |
| தி | ன் | ண | ட | வே | தீ | ன் | ய் | கு | ல |
| ள் | லா | பா | ன் | வெ | ள் | ளி | வ | ட | கா |
| து | தி | ல | தீ | வ | ன | ம் | ம் | ம் | ய் |
| ர | யா | கு | ர | ம் | சா | ரா | ள் | ட | ரோ |
| வு | ன | ஒ | ட் | ட | க | ம் | த் | பா | யீ |
| ல் | ம் | பொ | து | ஈ | சீ | மா | ன் | ள் | க் |

# அவர் வழி எப்பவும் தனி வழி தான்..

(தேவன் தனக்கு மிகவும் சரியான பெண்ணைத்தான் காட்டியிருக்கிறார் என்று ஆச்சரியத்தின் உச்சிக்குப் போன ஆபிரகாமின் வேலையாள், உடனே மண்டியிட்டு தேவனை வணங்கினதை, ரெபெக்காள் ஒன்றும் புரியாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.)

'பெண்ணே, நாங்கள் இன்று இரவு உங்கள் வீட்டில் தங்க வேண்டும் வசதியிருக்குமா?'

'எங்கள் வீட்டில் நீங்களும், உங்கள் பணியாளர்களும் தங்குவதற்குத் தாராளமான இடம் இருக்கிறது. தயங்காமல் வாருங்கள். உங்கள் ஒட்டகங்களுக்குத் தேவையான தீவனமும் இருக்கிறது. வாருங்கள் வந்து தங்கி இளைப்பாறுங்கள் 'ரெபெக்காள் அன்புடன் அழைத்தாள். அவளுடைய பணிவிலும் அவளுடைய உபசரித்தலிலும் பணியாளர் மிகவும் மகிழ்ந்தார். தேவன் தனக்குக் காட்டிய பெண் உண்மையிலேயே மிகவும் உயர்ந்த குணத்தினள் தான் என்று குதூகலித்தார்.

அவர்கள் அனைவரும் ரெபெக்காளின் இல்லத்துக்குச் சென்றனர். யாரோ சிலர் தன்னுடைய இல்லம் நோக்கி வருவதைக் கண்ட ரெபெக்காளின் தந்தையும், சகோதரனும் ஓடோடிச் சென்று அவர்களை வரவேற்றனர்.

'வாருங்கள் வாருங்கள். களைப்படைந்தவர் போல இருக்கிறீர்கள். தங்கி இளைப்பாறுங்கள். இன்று இரவு ஒரு நல்ல விருந்து உண்டு மகிழுங்கள்' என்று சொல்லிய ரெபெக்காவின் தந்தை உடனே பணியாளனை அழைத்து நல்ல விருந்தொன்றை ஏற்பாடு செய்யுமாறு ஆணையிட்டார். பணியாளர்கள் விருந்து தயாராக்கினார்கள்.

அவளுடைய பெற்றோரும், சகோதரனும் அவர்களை மிகவும் நன்றாக உபசரித்தார்கள். விருந்து தயாரானது.

'வாருங்கள். உண்போம்' ரெபெக்காளின் தந்தை பெத்துவேல் அழைத்தார்.

'உணவு ஏற்பாடு செய்தமைக்கு மிக்க நன்றி. ஆனால் அதற்கு முன் நான் ஒரு விஷயத்தைப் பேசவேண்டும்.'



‘சொல்லுங்கள். என்ன செய்தி?’

‘ நான் யார் தெரியுமா?’

‘இல்லை சொல்லுங்கள்’

‘நான் உங்கள் சகோதரன் ஆபிரகாமின் பணியாளன்’.

‘என்ன? நீங்கள் ஆபிரகாமின் பணியாளரா? ஆபிரகாம் எப்படி இருக்கிறார்? அவருடைய குடும்பத்தினர் எப்படி இருக்கிறார்கள்?’ பெத்துவேல் ஆச்சரியத்தில் கேள்விகளை அவசர அவசரமாய்க் கேட்டார்.

‘ஆபிரகாம் நன்றாக இருக்கிறார். தேவன் அவருக்கு நல்ல வாழ்க்கையைக் கொடுத்திருக்கிறார். உங்களுக்குத் தெரியுமா அவருடைய நூறாவது வயதில் அவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்தது. அவன் இப்போது வளர்ந்து திருமணப் பருவத்தை அடைந்துவிட்டான். அவனுக்குக் கானான் நாட்டுப் பெண்ணை மணமுடித்து வைக்க தலைவருக்கு விருப்பமில்லை. அதனால் தான் அவனுக்கு ஏற்ற ஒரு பெண்ணைத் தேடி நான் இங்கே வந்தேன்’ வேலையாள் சொல்லச் சொல்ல பெத்துவேல் ஆனந்தமாய்க் கேட்டுக் கொண்டிருந்தார்.

‘நல்ல அழகான, நல்ல குணவதியான ஒரு பெண் வேண்டும் என்பதே தலைவரின் ஆசை. எப்படி ஒரு நல்ல பெண்ணைக் கண்டுபிடிப்பது என்னும் கவலையில் நான் வந்து கொண்டிருந்தேன். அப்போது என் உள் மனதில் ஒரு எண்ணம் தோன்றியது. அது தேவன் தந்த எண்ணம் என்றே நினைக்கிறேன். அதன்படி ஊர் எல்லையிலிருக்கும் கிணற்றிலிருந்து எனக்கும் என் ஒட்டகங்களுக்கும் தண்ணீர் தரும் பெண்ணே தலைவரின் மகனுக்குரியவள் என்று காத்திருந்தேன். அப்போது தான் உமது மகள் வந்தாள். அன்போடு என்னையும், என் ஒட்டகங்களையும் கவனித்தாள். வியப்புடன் விசாரித்தபோது தான் அவள் உங்கள் மகள் என்று தெரிந்தது’ பனியாளன் சொல்லி நிறுத்தினார். பெத்துவேல் ஆச்சரியத்தின் விளிம்பில் நின்றார்.

‘நீங்கள் சொல்வதையெல்லாம் கேட்கக் கேட்க எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது! என்ன சொல்வதென்றே தெரியவில்லை. சரி.. ஆபிரகாமின் மகன் எங்கே?’

‘ஆபிரகாமிற்கு தன் மகன் ஈசாக்கை கானானை விட்டு வெளியே அனுப்ப மனமில்லை. எனவே என்னை மட்டுமே அனுப்பினார். நான் மனதுக்குள் உங்கள் மகள் ரெபெக்கா தான் ஈசாக்குக்குரியவள் என்று முடிவு செய்து விட்டேன். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?’

‘நான் என்ன சொல்வது? இது உங்கள் முடிவோ, எனது முடிவோ அல்ல. இது தேவனின் முடிவு. ரெபெக்காளை ஈசாக்கிற்குத் தர எனக்குச் சம்மதமே’ பெத்துவேல் சொன்னார்.

பணியாளன் மகிழ்ந்தான். ‘மிக்க நன்றி. ரெபெக்காளை நான் என்னுடன் அழைத்துக் கொண்டு போகலாமா?’

‘தாராளமாய் அழைத்துக் கொண்டு செல்லுங்கள்’ பெத்துவேல் மகிழ்வுடன் ஒப்புக்கொண்டார்.

‘என்னுடைய இரண்டாவது கவலையும் தீர்ந்தது’ பணியாளன் புன்னகைத்தான்.

‘இரண்டாவது கவலையா?’ பெத்துவேல் புரியாமல் கேட்டார்.

‘ஆம். தகுதியான பெண்ணைக் கண்டுபிடிப்பது ஒரு கவலை. அதை தேவன் தீர்த்து வைத்தார். அந்தப் பெண் என்னுடன் வர மறுத்தால் என்ன செய்வது என்பது என்னுடைய

இரண்டாவது கவலையாக இருந்தது. இப்போது நீங்கள் அதற்கும் சம்மதித்துவிட்டீர்கள் அல்லவா? அதனால் என்னுடைய கவலைகள் எல்லாம் தீர்ந்து விட்டன' பணியாளன் புன்னகையுடன் சொன்னான்.

'பெண் உங்களுடன் வர சம்மதித்து விட்டாளா?' திடீரென்று ஒலித்த குரல் வந்த திசையில் பணியாளன் திரும்பிப் பார்த்தான். அங்கே ரெபெக்காள் நின்று கொண்டிருந்தாள்.

'உன் தந்தை சம்மதித்ததனால் நீயும் ஒத்துக் கொள்வாய் என்று நினைத்தேன்...' பணியாளன் தடுமாற்றத்துடன் சொன்னான்.

'என்னிடம் நீங்கள் கேட்கவேயில்லையே...'

'அப்படியானால்... உனக்கு என்னுடன் வர விருப்பம் இல்லையா?'


'யார் சொன்னது விருப்பமில்லையென்று? முழு விருப்பம் தான்' ரெபெக்காள் குறும்புடன் சொல்ல, பெத்துவேல் சிரித்தார். பணியாளன் நிம்மதிப் பெருமூச்சு விட்டார்.

தான் கொண்டு வந்திருந்த விலையுயர்ந்த அன்பளிப்புகளையெல்லாம் அவர்களுக்குக் கொடுத்துவிட்டு மறுநாள் காலையில் ரெபெக்காளையும் அழைத்துக் கொண்டு தலைவரின் இல்லம் திரும்பினார். வீட்டுக்கு வந்து சேர்ந்து ஈசாக்கிடம் ரெபெக்காளை ஒப்படைத்தார்.


ஈசாக்கு ரெபெக்காளைப் பார்த்தார். அவளுடைய அழகில் மனதைப் பறிகொடுத்தார். அவளை தன்னுடைய தாயின் கூடாரத்துக்கு அழைத்துக் கொண்டு போய் மணமுடித்தார். அவர்கள் இருவரும் தங்கள் வாழ்க்கையை மகிழ்வுடன் ஆரம்பித்தனர்.


தொடரும்...

# படத்தைப் பார்த்து பெயரைக் கண்டுபிடி!











# நீ கோடாகோடியாய்ப் பெருகுவாயாக

**ஆதியாகமம் 24:25-67 வரையுள்ள வசனங்களைப் படித்து கேள்விகளுக்கு விடையளியுங்கள்.**

1. ரெபெக்காளுக்கு ஒரு சகோதரன் இருந்தான். அவன் பெயர் என்ன?
2. ................................ என் எஜமானை மிகவும் ஆசீர்வதித்திருக்கிறார், அவர் சீமானாயிருக்கிறார்.
3. என் இனத்தாரிடத்திலும், என் தகப்பன் வீட்டிலும் நீ என் குமாரனுக்குப் பெண்கொள்வாய் என்று கூறியது யார்?
4. இந்தக் காரியம் கர்த்தரால் வந்தது, உமக்கு நாங்கள் நலம் பொலம் ஒன்றும் சொல்லக்கூடாது என்று சொன்னது யார்?
5. எங்கள் சகோதரியே, நீ கோடாகோடியாய்ப் பெருகுவாயாக என்று லாபான் யாரை வாழ்த்தினான்?
6. கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவரே, உள்ளே வாரும் என்று சொன்னவர் யார்?
7. ரெபெக்காளும் அவள் வேலைக்காரிகளும் எழுந்து எந்த விலங்குகள்மேல் ஏறி, அந்த மனிதனோடேகூடப் போனார்கள்.
8. ஈசாக்கு தென்தேசத்தில் குடியிருந்தபோது அவன் எந்த துரவின் வழியாய்ப் புறப்பட்டு வந்தான்?
9. ஈசாக்கு எந்த வேளையிலே தியானம்பண்ண வெளியிலே போயிருந்தான்?
10. யார் தன் தாய்க்காகக் கொண்டிருந்த துக்கம் நீங்கி ஆறுதலடைந்தான்.

விடைகள் 21ஆம் பக்கம் பார்க்கவும்

# தன் நண்பர்களுடன் செல்ல குளவிக்கு சரியான வழிகாட்டுங்கள் குழந்தைகளே!



# குளவி (Wasp)

''உன் முகத்திற்கு முன்னின்று ஏவியரையும் கானானியரையும் ஏத்தியரையும் துரத்திவிட, குளவிகளை உனக்கு முன்னே அனுப்புவேன்'' (யாத்திராகமம் 23:28).

கர்த்தர் மோசேயை சீனாய் மலையில் சந்தித்து கொடுத்த அறிவுரை இன்றைய வேதாகமப்பகுதியாகிய யாத்திராகமம் 23ல் இடம் பெற்றுள்ளது. தேவன் தம்முடைய பிள்ளைகளை வழிநடத்திய விதத்தை அவர்கள் ஒருபோதும் மறந்து விடக்கூடாது என்றும், அவரே அவர்களை வழிநடத்த ஒரு தேவ தூதனை அவர்களுக்கு முன்பாக அனுப்புகிறார் என்றும் கூறினார். தேவன் அவர்களுடைய எதிரிகளை அவரே முறியடிப்பார் என்றும் கூறினார். தேவன் அதற்காக சில நகைச்சுவையான ஆயுதங்களையும் பயன்படுத்துவதாகக் கூறினார், உன் முகத்திற்கு முன்னின்று ஏவியரையும், கானானியரையும் ஏத்தியரையும் துரத்திவிட, குளவிகளை உனக்குமுன்னே அனுப்புவேன் (யாத்திராகமம் 23:28) என்றார். ஐயோ! குளவிகள் கூட கர்த்தருக்கு ஆயுதமா?????? ஆச்சரியமாக உள்ளது. இதைவிட அதிகமாய் என்னைக் கவர்ந்த காரியம் என்னவென்றால், அவர் இஸ்ரவேலில் குடியிருந்த மக்களை உடனே வெளியேற்ற மாட்டாராம். ஏனென்றால் உடனே வெளியேறிவிட்டால், தேசம் பாழாய்ப் போகும், காட்டு மிருகங்கள் பெருகிப்போகும். ஆதலால் நீ விருத்தியடைந்து தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்வரைக்கும் அவர்களைக் கொஞ்சம் கொஞ்சமாய் உன் முன்னின்று துரத்தி விடுவேன் என்கிறார்.

தேவன் நம் வாழ்க்கையில் எவ்வளவு அற்புதமாகத் திட்டமிட்டு கிரியைசெய்கிறார் பாருங்கள்! ஒரே நேரத்தில் எல்லாவற்றையும் செய்து நம்மை மூச்சுத்திணர வைப்பதில்லை, நாம் எவ்வளவுதூரம் தாங்கமுடியுமோ அவ்வளவு கிரியைகளை செய்து, கொஞ்சம் கொஞ்சமாய் நமக்கு அன்றன்று என்னத் தேவையோ அதை மட்டும் அளிக்கிறார். அல்லேலூயா!

இந்த வாரம் குளவியைக் குறித்துப் பார்ப்போம். குளவி என்று சொன்னாலே 'கொட்டு' தான் நினைவுக்கு வரும். 'குளவி கொட்டுவது போல' என்பது நமது பேச்சு வழக்கு.

**குளவி** என்பது ஹிம்னோட்பெரா வகுப்பை சேர்ந்த ஒரு பூச்சியினம் ஆகும். இவை தேனீயுமல்லாத எறும்புமல்லாத அபோக்ரிட்டா எனும் துணை வரிசையை சேர்ந்தவை. குளவிகள், அண்டார்டிகாவைத் தவிர எல்லா இடங்களிலும் காணப்படுகின்றன. இதுவரை கண்டறியப்பட்ட 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குளவி இனங்களில் சுமார் 9000 ரகங்கள் தனித்து வாழக்கூடியன. இவை சில வேளைகளில் கூட்டமாகவும் சிலவேளைகளில் தனியாகவும் வாழ்பவை. கிட்டத்தட்ட அனைத்து குளவிகளும் நிலப்பரப்பில் வாழ்பவை. ஒரு சில ஒட்டுண்ணி இனங்கள் மட்டுமே நீரில் வாழ்பவை.



குளவிகள் அழகான வண்ணங்களில் இருக்கின்றன. இளம் மஞ்சள், அடர் பழுப்பு, மெட்டலிக் புளூ, ஆழ்சிவப்பு, கறுப்பு மற்றும் வரி

வடிங்களிலும் உள்ளன. இவற்றிக்கு தலை, மார்பு, வயிறு என மூன்று பகுதிகள் பிரிக்கப்பட்டாலும் மற்ற பூச்சிகளைப் போல் இல்லாமல் மார்பையும், வயிற்றையும் இணைக்க ஒரு மெல்லிய இடுப்பு இருக்கிறது. உறுதியான புறத்தோல் உள்ளது. குளவியின் வாயானது தேனீக்களைப் போல் இன்றி, தாவரப் பொருட்களை அரைப்பதற்கு ஏற்ப அமைந்துள்ளது. குளவிகள் கூட்டுக் கண்களோடு, பல எளிய கண்களையும் கொண்டுள்ளன. மேலும் குளவிகளுக்கு இரண்டு ஜோடி இறக்கைகள், மூன்று ஜோடி கால்களும் உள்ளன. 12 முதல் 13 வரை உணர்கொம்புகள் உள்ளன.




ஆண் குளவிகளை விடப் பெண் குளவிகள் அதிக எடை கொண்டவை. பெண் குளவிகளின் வால் முனைகளில் மட்டுமே விஷக் கொடுக்குகள் உள்ளன. குளவி கொட்டுவது மனிதர்களுக்கு மிகுந்த அரிப்பு, வலி, வீக்கம் போன்ற பாதிப்புகளை ஏற்படுத்தும்.

உலகில் உள்ள அனைத்து குளவிகளும் கொட்டாது. பெரும்பாலான குளவிகள் அடுத்த பூச்சிகளை அழிக்கக்கூடிய வேலைகளைத் தான் செய்கின்றன. கொட்டுவதன் மூலம் நமக்குத் தீங்கு செய்யும் பூச்சி என மனிதர்கள் நினைத்தாலும் விவசாயத்தைப் பொறுத்தவரை பயிர்களை அழிக்கும் தீமை செய்யும் பூச்சிகளை அழிக்கக்கூடிய நன்மை செய்யும் பூச்சிகள் பட்டியலில்தான் குளவிகள் இடம்பிடிக்கின்றன.

குளவிகளைப் போலவே தேனீக்களும் கொட்டும் என்றாலும் குளவி கொட்டுவதற்கும் தேனீ கொட்டுவதற்கும் வித்தியாசம் உண்டு. தேனீயாக இருந்தாலும் குளவியாக இருந்தாலும் அவற்றின் கொடுக்கு உடலின் பின் பகுதியில்தான் இருக்கும். தேனீக்கள் கொட்டும்போது அதன் கொடுக்கு நம் உடலில் சிக்கிக்கொள்ளும். அதனால், தேனீ அந்த உறுப்பை இழந்து இறந்துவிடும். ஆனால், குளவியின் கதை அப்படியல்ல... தேனீக்களைப் போல கொட்டுவதற்குக் கொடுக்கின் நுனியில் முள் பற்கள் போன்ற அமைப்பு இல்லை. அதற்குப் பதிலாகக் குளவிகளுக்கு ஊசி போன்ற கொடுக்கு மட்டுமே இருக்கிறது. அதனால் ஒருமுறை கொட்டியவுடன் விட்டு விடாது. தொடர்ந்து மறுபடி மறுபடியும் கொட்டிக்கொண்டே இருக்கும். அதனால்தான் குளவி கொட்டுவதை நினைத்து மனிதர்கள் பயப்படுகிறார்கள்.

பூச்சிகள் உலக நாடுகளில் பரவியுள்ளன. எனினும், தீவிரமான விவசாயம், பூச்சிக்கொல்லிப் பயன்பாடு, பருவநிலை மாற்றம் ஆகியன பூச்சிகளின் அழிவுக்குக் காரணமாக அமைகின்றன. உலகிலுள்ள பூச்சி வகைகளில் கிட்டத்தட்ட பாதி வேகமாகக் குறைந்து வருகின்றன. மூன்றில் ஒருபங்கு பூச்சிகள் ஒட்டுமொத்தமாகவே அழிந்து போகும் ஆபத்தில் உள்ளன. பூச்சிகளின் எண்ணிக்கை குறைவதால், பயிர்களின் மகரந்தச் சேர்க்கைக்கும், இயற்கை உணவுச் சங்கிலிக்கும் கடுமையான பாதிப்பு ஏற்படலாம் என்று சிட்னி பல்கலைக்கழகமும், சீன வேளாண் அறிவியல் கழகமும் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது. சுற்றுச்சூழலில் பெரும் பங்கு வகிக்கும் பூச்சிகளை அழிவின் விளிம்பில் இருந்து காத்து, சுற்றுச்சூழலைக் காப்போம்.

**தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார். அது மிகவும் நன்றாயிருந்தது. சகலத்தையும் உண்டாக்கினவருக்கு நன்றி.**

# வேதமே வெளிச்சம்


நீதிமொழிகள் 13:2,3
God bless you
மனுஷன் தன் வாயின் பலனால் நன்மையைப் புசிப்பான்; தன் வாயைக் காக்கிறவன் தன் பிராணனைக் காக்கிறான்; தன் உதடுகளை விரிவாய்த் திறக்கிறவனோ கலக்கமடைவான்.


வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்.
கொலோசெயர் 3:17
God bless you all


தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும்.
God bless you
யோவான் 4:24


கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார், நான் தாழ்ச்சியடையேன்.
சங்கீதம் 23:1
God bless you

# தேவத் திட்டம்

(வாசிக்க: யாத்திராகமம், 1:2; அப்போஸ்தலர் 7:23; எபிரெயர் 11:24-27)

கண்மூடி விளையாடும்போது (hide-and-seek) நீங்கள் எப்போதாவது மிகச் சிறந்த ஒரு மறைவிடத்தைக் கண்டிருக்கிறீர்களா? வேறு யாரும் தேடிப் பார்க்கவே மாட்டார்கள் என்று நீங்கள் நினைக்கும் ஒரு இடம்? மோசேயின் தாய் தேடிக்கொண்டிருந்ததும் அத்தகைய ஒரு இடத்தையே ஆகும்.

எகிப்தின் அரசனான பார்வோன் கவலையில் ஆழ்ந்திருந்தான். 'இந்த இஸ்ரவேலர்களைக் குறித்து நாம் என்ன செய்ய முடியும்?' என்று அவன் தன் ஆலோசகர்களிடம் கேட்டான். 'அவர்கள் எண்ணிக்கையில் மிக அதிகமாக இருக்கிறார்கள்; மேலும் அவர்கள் மிகவும் வலிமை வாய்ந்தவர்களாகவும் இருக்கிறார்கள். ஒருவேளை போர் மூண்டால், அவர்கள் நம் எதிரிகளுடன் சேர்ந்து கொண்டு நமக்கு எதிராகவே போரிடவும் கூடும்.'

இறுதியில், பார்வோன் ஒரு கட்டளையைப் பிறப்பிக்க வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது. அதன்படி, இஸ்ரவேலர்களின் ஆண் குழந்தைகள் அனைவரையும் கொன்றுவிட வேண்டும் என்று ஆணையிடப்பட்டது.

யோகெபேத் மற்றும் அம்ராம் ஆகியோர் மிகுந்த அச்சமடைந்தனர். தங்கள் குழந்தை இறப்பதை அவர்கள் ஒருபோதும் விரும்பவில்லை! எனவே, அக்குழந்தையை மறைத்து வைக்க அவர்கள் தீர்மானித்தனர்.



மூன்று மாதங்களுக்கு, குழந்தையான மோசேயைத் தங்கள் வீட்டிலேயே மறைத்து வைத்துப் பராமரிப்பதில் அவர்கள் வெற்றி பெற்றனர். ஆனால் வெகு விரைவில், அக்குழந்தை அதிக சத்தம் எழுப்பத் தொடங்கியது.

வீரர்கள் குழந்தையைக் கண்டுபிடித்துவிடுவார்களோ என்று யோகெபேத் அஞ்சினாள். 'நாம் மோசேயை ஆற்றில் விட்டுவிடுவோம்' என்று யோகெபேத் கூறினாள். 'ஒரு கூடையினுள் அவனை வைத்து, அந்தக் கூடை நீரில் மிதக்கும் வகையில் அதன் வெளிப்புறம் முழுவதும் தார் பூசிவிடுவோம்.'

'நான் அருகிலேயே நின்று கவனித்துக்கொள்வேன்; அந்தக் கூடைக்கு எந்த ஆபத்தும் நேராமல் பார்த்துக்கொள்வேன்' என்று மோசேயின் மூத்த சகோதரியான மிரியாம் கூறியிருக்கலாம்.

யோகெபேத் தன் மகனை, அந்தக் கூடையினுள் வைத்துச் சுமந்துகொண்டு ஆற்றங்கரைக்குச் சென்றாள். கூடை அடித்துச் செல்லப்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காக, நாணல் செடிகள் அடர்ந்து வளர்ந்திருந்த ஒரு இடத்தில் அவள் அந்தக் கூடையை நீரில் இறக்கி வைத்தாள். தன் சகோதரன் கூடைக்குள் பத்திரமாக இருக்கிறானா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள, மிரியாம் அந்தக் கூடையையே கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தாள். மேலும், தேவன் மோசேயைப் பாதுகாப்பார் என்று யோகெபேத் மனமுருக வேண்டிக்கொண்டாள்.

பார்வோனின் மகள் ஆற்றில் நீராடுவதற்காக வந்தபோது, அவள் அந்தக் கூடையைக் கண்டாள். 'அந்த நாணல் செடிகளுக்கு நடுவே இருப்பது என்ன?' என்று அவள் தன் வேலைக்காரர்களிடம் கேட்டாள். 'தயவுசெய்து, அதை என்னிடம் எடுத்து வாருங்கள்.'

விரைவிலேயே அந்தக் கூடை இளவரசியிடம் கொண்டு வந்து ஒப்படைக்கப்பட்டது. அவள் கூடையின் மூடியைத் திறந்து உள்ளே எட்டிப் பார்த்தாள். அப்போது, குழந்தையான மோசே அழத் தொடங்கினான். இளவரசி புன்னகைத்து, ''இவன் எபிரேயக் குழந்தைகளில் ஒருவன். மற்ற குழந்தைகளைப் போல இவனும் இறக்க நான் அனுமதிக்க மாட்டேன். இவனை நான் வைத்துக்கொண்டு, என் சொந்த மகனைப் போலவே வளர்ப்பேன்'' என்று கூறினாள்.

மிரியாம் இதைக் கேட்டாள். அவள் விரைந்து இளவரசியிடம் சென்று, ''இவனை உங்களுக்காகப் பராமரிக்க, ஒரு எபிரேயப் பெண்ணை நான் தேடித் தரவா?'' என்று கேட்டாள்.



''ஆம், தயவுசெய்து செய். அது மிகவும் உதவியாக இருக்கும்'' என்று இளவரசி கூறினாள்.

மிரியாம் வேகமாக ஓடிச் சென்று தன் தாயை அழைத்து வந்தாள். யோகெபேத் அங்கு வந்ததும், இளவரசி புன்னகைத்தாள். ''தயவுசெய்து, இந்தக் குழந்தையை எடுத்துக்கொண்டு எனக்காக இவனைப் பராமரித்து வாருங்கள்'' என்று அவள் கூறினாள். ''நான்

உங்களுக்கு நல்ல ஊதியம் தருவேன். இவன் வளர்ந்து பெரியவனானதும், இவனை அழைத்துவர ஆள் அனுப்புவேன்.''

யோகெபேத் மிகுந்த மகிழ்ச்சியடைந்தாள்! அவர்களால் தங்கள் குழந்தையைத் தங்களுடனேயே வைத்துக்கொள்ள முடிந்தது! அதோடு, குழந்தையைப் பராமரிப்பதற்காக அவர்களுக்கு ஊதியமும் கிடைக்கவிருந்தது!

''இது ஒரு அற்புதம்!'' என்று அம்ராம் வியந்து கூறினார். ''இக்குழந்தைக்காகக் தேவனிடம் நிச்சயம் ஒரு திட்டம் இருக்க வேண்டும்.''

**நினைவு வசனம்:**

''சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத் துதிப்பதாக.''
(சங்கீதம் 150:6)

''ஆம்,'' என்று யோகெபேத் பதிலளித்தாள். ''பரலோக தேவனைப் பற்றி எங்களுக்குத் தெரிந்த அனைத்தையும் இவனுக்கு நாங்கள் கற்றுக்கொடுப்போம். இளவரசியுடன் வாழ்வதற்காக அரண்மனைக்குச் செல்வதற்கு முன்பே, தேவனைப் பற்றிய முழு விவரங்களையும் இவன் அறிந்திருக்க வேண்டும்.''

இளவரசி மோசேயை யோகெபேத்திடம் ஒப்படைத்துச் சென்றாள்; மோசே அவர்களுடன் வாழ்ந்த அந்த ஆண்டுகள் முழுவதும், அம்ராமும் யோகெபேத்தும் அவனுக்கு தேவனைப் பற்றியும், அவருடைய மக்களைப் பற்றியும் கற்றுக்கொடுத்தார்கள். ஆனால், மோசே அரண்மனைக்குச் செல்ல வேண்டிய நாள் வந்தது. அங்கே மோசே பல புதிய விஷயங்களைக் கற்றுக்கொண்டான்; ஆயினும், அவன் தேவனை ஒருபோதும் மறக்கவில்லை.

மோசேக்கு நாற்பது வயதானபோது, ஒரு எகிப்தியன் ஒரு இஸ்ரவேலனை அடித்துத் துன்புறுத்துவதை அவன் கண்டான். அவனுக்குக் கடும் கோபம் மூண்டது; அதனால் அவன் அந்த எகிப்தியனைக் கொன்றுவிட்டான். மறுநாள், இரண்டு இஸ்ரவேலர்கள் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்கொண்டிருப்பதை மோசே கண்டான். அவன் அவர்கள் இருவருக்கும் நடுவே சென்று, சண்டையை நிறுத்துமாறு அவர்களைக் கேட்டுக்கொண்டான். அவர்கள் மோசேயின் பக்கம் திரும்பி, ''நீ எங்களையும் கொன்றுவிடப் போகிறாயா?'' என்று கேட்டார்கள்.

மோசே அச்சமடைந்தான். அந்த எகிப்தியனைக் கொன்றதன் மூலம் அவன் ஒரு பயங்கரமான செயலைச் செய்துவிட்டான். அச்செயலுக்காகப் பார்வோன் தன்னை மரணதண்டனைக்கு உட்படுத்தக்கூடும் என்று அவன் அஞ்சினான். எனவே, மோசே அங்கிருந்து ஓடிச்சென்று மீதியான் தேசத்தில் தஞ்சம் புகுந்தான். தேவன் அப்போதும் அவனுடனேயே இருந்து, அவனைப் பாதுகாத்து வந்தார். மோசே நிறைவேற்ற வேண்டிய ஒரு சிறப்பான பணி தேவனிடம் இருந்தது.

மீதியான் வனாந்தரத்தில் அவன் கழித்த காலம், அந்தப் பணியைச் செய்வதற்கு மோசேயைத் தயார்படுத்த உதவியது. தேவன் உங்களையும் கண்ணும் கருத்துமாகப் பாதுகாக்கிறார். உங்கள் வாழ்க்கைக்காகவும் அவரிடம் ஏதேனும் ஒரு திட்டம் இருக்கக்கூடும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

# சிலுவைப் பாடுகள்

அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் (மத்தேயு 1:21). மனித குலத்தின் பாவங்களை மன்னிக்கவும், பாவத்தின் பிடியிலிருந்து மீட்டு, நித்திய ஜீவனை அளிப்பதற்காகவும்தான் இயேசு கிறிஸ்து இந்த உலகிற்கு வந்தார். சிலுவைப்பாடுகளை சகித்து நமக்காக ஜீவனையும் தந்து, மூன்றாம் நாள் உயிரோடு எழுந்தார். இங்கே இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தைக்குறித்து வரிசையாக படங்களுடன் கொடுக்கப்பட்டுள்ளது. அறிந்துகொள்வீர்களாக.
























பேதுரு இயேசுவைப் பின்தொடர்ந்து, அவர் வைக்கப்பட்டிருந்த இடத்திற்கு வெளியே காத்திருந்தார். ஒருவர் அவர் இயேசுவின் நண்பரா என்று கேட்டார். பேதுரு தனக்கு இயேசுவைத் தெரியாது என்று கூறினார்.
அப்போது சேவல் கூவியது. இயேசு சொன்னதை பேதுரு நினைவு கூர்ந்து மிகவும் வருத்தமடைந்தான்.
இயேசுவுக்குப் பதிலாக பரபாஸை விடுதலை செய்தான் பொந்தியு பிலாத்து. இயேசு தண்டிக்கப்பட வேண்டும் என்று மக்கள் விரும்பினர்.
இயேசு எருசலேமின் தெருக்களில் ஒரு கனமான சிலுவையைச் சுமக்க வேண்டியிருந்தது.
சீமோன் இயேசுவின் சிலுவையை மலைக்குச் சுமந்து சென்றார்.
இயேசு சிலுவையில் மரித்தார். அவருடைய நண்பர்களும் குடும்பத்தினரும் மிகவும் துக்கமடைந்தனர்.
இயேசு இறந்தபோது, பூமி அதிர்ந்தது. ஆலயம் என்ற சிறப்பு இடத்தில் இருந்த திரைச்சீலை இரண்டாகக் கிழிந்தது.
இயேசுவின் உடல் ஒரு கல்லறையில் வைக்கப்பட்டது. அதன் நுழைவாயிலுக்கு முன்னால் ஒரு பெரிய, கனமான கல் வைக்கப்பட்டது.
மூன்றாம் நாள், மரியாளும் இயேசுவின் மற்ற சில நண்பர்களும் கல்லறைக்குச் சென்றார்கள். இயேசுவின் உடல் அங்கே இல்லை. கல் புரட்டப்பட்டிருந்தது. இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்று ஒரு தேவதூதன் அவர்களிடம் சொன்னான்.
இயேசு பரலோகத்திற்குச் செல்வதற்கு முன்பு தம்முடைய நண்பர்களைச் சந்தித்தார்.






# உலக வாய்வழி சுகாதார தினம்

# World Oral Health Day

உலக வாய்வழி சுகாதார தினம் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 20 அன்று கொண்டாடப்படுகிறது. வாய் ஆரோக்கியம் மற்றும் வாய்வழி நோய்களைத் தடுப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதே இந்நாளின் நோக்கமாகும். ஒரு பெற்றோராக நினைவில் கொள்ளுங்கள், உங்கள் குழந்தையின் வாய்வழி சுகாதாரம் நன்கு பராமரிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். குழந்தைப் பற்கள் மிகவும் முக்கியம், பல் சிதைவைத் தடுக்கவில்லை என்றால், அது குழந்தை பருவத்தில் அல்லது எதிர்காலத்தில் உயிருக்கு ஆபத்தான நோய்த்தொற்றுகளுக்கு வழிவகுக்கும்.

குழந்தைகளின் ஆரோக்கியத்தில் பற்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. உணவுகளை மென்று சாப்பிடும்போதுதான் சத்துக்கள் உடலுக்கு விரைவில் கிடைக்கின்றன. குழந்தைகளின் பற்களைப் பாதுகாக்கும் 8 வழிமுறைகளை இந்தப் பதிவில் தெரிந்து கொள்வோமா!

சுத்தம் முக்கியம்: குழந்தைகளுக்கு பற்கள் முளைக்கத் துவங்கியவுடனே அவர்களின் பற்களை துலக்கத் துவங்கிவிட வேண்டும். மிருதுவான துணி அல்லது கைகளால் பற்களை துலக்கக் கற்றுக்கொடுத்து வாயை கொப்பளிக்கும் வழக்கத்தையும் ஏற்படுத்த வேணடும். சிறிது காலத்தில் குழந்தைகளுக்கு பிரஷ் வாங்கி அவர்களின் பற்களை சுத்தம் செய்ய பழக்க வேண்டும்.

பற்களில் ஒட்டும் உணவு: பற்களில் ஒட்டும் உணவை குழந்தைகளுக்கு கொடுக்கக் கூடாது. ஆரோக்கியமான உணவுகளை மட்டுமே உண்ணப் பழக்க வேண்டும். சாக்லேட்கள், மிட்டாய்களை கட்டாயம் தவிர்க்க வேண்டும். இவற்றுக்கு பதில் கேரட், ஆப்பிள், பீட்ரூட், சின்ன வெங்காயம் என காய்கறிகளை வெட்டிக்கொடுத்து சாப்பிட வைக்க வேண்டும்.

ஆப்பிள்: ஆப்பிள் ஒரு இயற்கை டூத் பிரஷ் ஆகும். சாப்பிடும்போதே பற்களை சுத்தம் செய்யவும் அது உதவுகிறது. மேலும், ஸ்ட்ராபெரிகளும் சாப்பிடும்போதே பற்களை சுத்தம் செய்யும் தன்மை கொண்டதால், அவற்றை சாப்பிட வைக்க வேண்டும்.

இனிப்புகள்: குழந்தைகளுக்கு சாக்லேட்கள், மிட்டாய்கள் அல்லது ஏதேனும் ஸ்வீட்கள் கொடுத்தால், அதை அவர்கள் மதிய உணவு சாப்பிடும் ஒரு மணி நேரத்திற்கு முன்பு கொடுப்பது நல்லது. அது அவர்கள் உணவு சாப்பிடும்போது காணாமல் போய்விடும்.

நீர்ச்சத்து: உடலின் ஒவ்வொரு செயல்பாட்டுக்கும், நீர்ச்சத்துக்கும் தொடர்பு உண்டு. எனவே, குழந்தைகளின் வாய் மற்றும் பற்கள் நீர்ச்சத்துடன் உள்ளதை உறுதிப்படுத்துங்கள். அவர்கள் தேவையான அளவு தண்ணீர் எடுத்துக்கொள்வது அவசியம்.

சாப்பிட்ட பிறகு வாயை கொப்பளிக்க வேண்டியது அவசியம்: குழந்தைகள் எதை சாப்பிட்டாலும், உடனே அவர்களின் வாயை கழுவி விடவேண்டும். குழந்தைகள் உறங்கும்போது, அவர்கள் வாயில் பால் பாட்டிலோ அல்லது தண்ணீர் பாட்டிலோ இருக்கக் கூடாது. இதனால் குழந்தைகளுக்குப் பல் சொத்தை ஏற்படும். பற்களின் உள்ளே உணவு துகள்கள் தங்கி அவை பல் சொத்தை ஏற்படுத்தாமல் இருப்பதை உறுதி செய்யுங்கள்.



குழிகளை அடைப்பது: குழந்தைகளுக்கு பற்களில் குழிகள் இருந்தால் அதை அடைப்பது மிகவும் நல்லது. அப்போதுதான் அங்கு எந்த உணவும் சென்று சிக்கிக்கொண்டு அவர்களுக்கு பல் சொத்தையை ஏற்படுத்தாது.

ஃப்ளூரைட்: ஐந்து வயதைக் கடந்த குழந்தைகளுக்கு பற்களில் ஃப்ளூரைடை வைப்பதால், அது அவர்களின் பற்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தி, அவர்களுக்கு பல் சொத்தை ஏற்படாமல் காக்கும்.


இத்தகைய நடைமுறைகளைக் கையாளுவதன் மூலம் குழந்தைகள் பற்களின் உறுதித் தன்மையை உறுதி செய்யலாம்.

10ஆம் பக்கத்தின் விடைகள்

## நீ கோடாகோடியாய்ப் பெருகுவாயாக

1. லாபான், 2. கர்த்தர், 3. ஆபிரகாம், 4. லாபானும் பெத்துவேலும்
5. ரெபெக்காள், 6. லாபான், 7. ஒட்டகங்கள்மேல்
8. லகாய்ரோயீ, 9. சாயங்காலவேளையிலே, 10. ஈசாக்கு


# இதுதான்டா சர்ஜிக்கல் ஸ்டிரைக்
## (துல்லிய தாக்குதல்)




நீங்கள் என் வார்த்தைகளை உங்கள் இருதயத்திலும் உங்கள் ஆத்துமாவிலும் பதித்து, அவைகளை உங்கள் கையின்மேல் அடையாளமாகக் கட்டி, உங்கள் கண்களின் நடுவே ஞாபகக்குறியாக வைத்து,... (உபாகமம் 11:19)




வசனத்தைக் கேட்டும், உலகக்கவலைகளும், ஐசுவரியத்தின் மயக்கமும், மற்றவைகளைப்பற்றி உண்டாகிற இச்சைகளும் உட்பிரவேசித்து, வசனத்தை நெருக்கிப்போட, அதினால் பலனற்றுப்போகிறார்கள்; இவர்களே முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவர்கள். (மாற்கு 4:18-19)




விரியன் பாம்புக் குட்டிகளே, நீங்கள் பொல்லாதவர்களாயிருக்க, நலமானவைகளை எப்படிப் பேசுவீர்கள்? இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும். (மத்தேயு 12:34)




ஜாதிகள் கொந்தளித்தது, ராஜ்யங்கள் தத்தளித்தது; அவர் தமது சத்தத்தை முழங்கப்பண்ணினார், பூமி உருகிப்போயிற்று. சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார்; யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர். (சங்கீதம் 46:6-7)



# தண்ணீர்... தண்ணீர்...

உங்கள் குழந்தையை நீரேற்றமாக வைத்திருப்பது நல்ல ஆரோக்கியத்தையும் நல்வாழ்வையும் மேம்படுத்துவதற்கான எளிய ஆனால் மிகவும் பயனுள்ள வழியாகும். ஆனால், பெரும்பாலான குழந்தைகள் ஒவ்வொரு நாளும் போதுமான அளவு தண்ணீர் குடிப்பதில்லை. ஒரு பெற்றோராக, நீங்கள் எழுந்ததிலிருந்து தொடங்கி, ஒரு நல்ல முன்மாதிரியாக செயல்படுவது மற்றும் நாள் முழுவதும் தண்ணீர் குடிப்பது நல்லது. உங்கள் குழந்தையின் ஆரோக்கியத்திற்கு தண்ணீர் குடிப்பது ஏன் முக்கியம் என்பதையும், அவர்களின் உணவில் அதிக தண்ணீரை எவ்வாறு சேர்க்கலாம் என்பதையும் இங்கே காணலாம்.

### குழந்தைகளுக்கு தண்ணீர் ஏன் முக்கியம்?

= மனித உடலில் 75% நீரினால் ஆனது.

= நீர் ஊட்டச்சத்துக்கள், ஆக்ஸிஜன் மற்றும் பிற பொருட்களை உடலுக்கு உள்ளேயும் வெளியேயும் கொண்டு செல்ல உதவுகிறது.

= உடலில் உள்ள அனைத்து வேதியியல் எதிர்வினைகளுக்கும் நீர் உதவுகிறது.

= நீர் உங்கள் உடலின் வெப்பநிலையை பராமரிக்கவும் சீராக்கவும் உதவுகிறது.

= இது மலச்சிக்கலைத் தடுக்க உதவுகிறது மற்றும் மலத்தை மென்மையாக்குவதை ஊக்குவிக்கிறது.

= இது உடலில் இருந்து நச்சுகள் மற்றும் கழிவுகளை அகற்ற உதவுகிறது.

= நீர் நம் கண்கள், மூட்டுகள், மூக்கு மற்றும் வாய்க்கு மசகு எண்ணெயாக செயல்படுகிறது.

### உங்கள் குழந்தைகளுக்கு ஒரு நாளைக்கு எவ்வளவு தண்ணீர் தேவை?

இந்திய உணவியல் சங்கம் (IDA) வகுத்துள்ள வழிகாட்டுதல்கள் தேவைப்படும் நீரின் மொத்த அளவு குழந்தையின் எடையைப் பொறுத்தது என்பதைக் காட்டுங்கள். இந்த அளவு நீர் உட்பட மொத்த திரவ உட்கொள்ளலை அடிப்படையாகக் கொண்டது.

| குழந்தையின் உடல் எடை (KGS) | ஃப்ளூயிட் (ML/தினம்) |
|---|---|
| 8 | 800 |
| 10 | 1000 |
| 12 | 1100 |
| 14 | 1200 |
| 16 | 1300 |
| 18 | 1400 |

### உங்கள் குழந்தை குறைந்த தண்ணீரை உட்கொள்கிறதா என்பதை எவ்வாறு அறிவது?

உடலுக்கு போதுமான நீர் கிடைக்காதபோது, அது நீரிழப்புக்கு ஆளாகிறது. உங்கள் பிள்ளை குறைந்த அளவு திரவங்களை உட்கொண்டால், உடல் சில சமிக்ஞைகள் மற்றும் குறிப்பான்களை அனுப்புகிறது. இந்த சமிக்ஞைகள் அல்லது குறிப்பான்கள் பின்வருமாறு:

அடர் நிற சிறுநீர், குறைந்த அளவு சிறுநீர், அடிக்கடி தலைவலி, சக்தி குறைவு, தலைசுற்றல்.

எந்தவொரு விளையாட்டு, விளையாட்டு அல்லது உடல் செயல்பாடுகளுக்கு முன்னும் பின்னும் உங்கள் பிள்ளைக்கு போதுமான தண்ணீரைக் கொடுக்க எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். சிறுநீர் மற்றும் வியர்வை மூலம் இழக்கப்படும் திரவத்தை போதுமான திரவங்களை எடுத்துக்கொள்வதன் மூலம் ஈடுசெய்ய வேண்டும். குழந்தை தண்ணீரைக் குடிப்பதையும், அவசரப்பட்டு அதைக் குடிக்காமல் இருப்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். குழந்தை எவ்வளவு திரவத்தை இழந்துள்ளது என்பதை துல்லியமாக கண்காணிக்க முடியாமல் போகலாம், எனவே, கட்டைவிரல் விதியாக, நாள் முழுவதும் அவர்களுக்கு 6-8 கப் தண்ணீரைக் கொடுங்கள்.

### உங்கள் குழந்தையின் உணவில் தண்ணீரை எவ்வாறு சேர்ப்பது?

உங்கள் குழந்தையின் உணவில் ஏராளமான பழங்கள் மற்றும் காய்கறிகளைச் சேர்க்கவும், குறிப்பாக நிறைய நீர் உள்ளவை. வெள்ளரிக்காய், தர்பூசணி, ஆரஞ்சு, சாத்துக்குடி, தக்காளி போன்ற உணவுகள் இதில் அடங்கும்.

புதிய பழம் அல்லது காய்கறி சாற்றை உட்கொள்ள உங்கள் பிள்ளையை ஊக்குவிக்கவும். கோலாக்கள், சோடாக்கள், ரெடிமேட் பழச்சாறு பானங்களை உட்கொள்வதைத் தவிர்க்கவும்.

உங்கள் குழந்தையின் சுவை மொட்டுகளை உறிஞ்சுவதற்கு பழ பாப்சிகிள்களைக் கொடுப்பதன் மூலம் உற்சாகப்படுத்துங்கள். இவை கோடையில் உண்மையான வெற்றியாக இருக்கும்.

சூப், கறி, குழம்பு, மோர், இளநீர் போன்ற திரவங்களை உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் குழந்தை வெற்று தண்ணீரைக் குடிக்காது என்று நீங்கள் நினைத்தால், சிறிது எலுமிச்சை துண்டுகள் மற்றும் புதினாவுடன் ஆரஞ்சு துண்டுகளை தண்ணீரில் சேர்க்கவும், இது புத்துணர்ச்சியூட்டும் சுவையைத் தரும்.

# வங்கிக் கணக்கின் (Bank Account) விபரம்:

ஏலிம் ஊழியங்கள் மற்றும் அன்றன்றுள்ள அப்பம் ஊழியங்களை பொருளாதார உதவிகளால் தாங்க விரும்பினாலோ, காசோலை (Cheque) / கேட்பு வரைவோலை (Demand Draft) மூலம் அனுப்புவதாக இருந்தாலோ, கீழ்க்காணும் ஏதேனுமொரு பெயரில் எடுத்து எமது அலுவலக முகவரிக்கு பதிவு அஞ்சல் (Registered Post) அல்லது தூதஞ்சல் (Courier) மூலமாக அனுப்பலாம்.

1. ACCOUNT NAME : **MR. JOSEPH OSBORNE JEBADURAI**
   ACCOUNT NO. : 49 510100003062

2. ACCOUNT NAME : **ANTANTULLA APPAM TRUST**
   ACCOUNT NO. : 49510200000122
   BANK NAME : **BANK OF BARODA**
   IFSC CODE : BARB0KODAMB (5TH CHARACTER IS ZERO)
   SWIFT CODE : BARBINBB
   BRANCH & CODE : UNITED INDIA COLONY, KODAMBAKKAM & 4951
   CHENNAI – 600 024.

**APPAM - GOOGLE PAY : 98406 95296**

**ELIM - GOOGLE PAY : 98848 77607**

**Address : J. JOSEPH OSBORNE JEBADURAI**
**50, Railway Station Road, Kodambakkam, Chennai - 600 024. Tamil Nadu**

1. ACCOUNT NAME : **ELIM GLORIOUS REVIVAL CHURCH**
   ACCOUNT NO. : 49510100000230

2. ACCOUNT NAME : **MR. JOSEPH OSBORNE JEBADURAI**
   ACCOUNT NO. : 49510100003063
   BANK NAME : BANK OF BARODA
   IFSC CODE : BARB0KODAMB (5TH CHARACTER IS ZERO)
   BRANCH : KODAMBAKKAM
   CHENNAI - 600024

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனாக. கலாத்தியர் 6:14

## ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்

# 40 DAYS சிலுவை தியானக் கூட்டம்

**பிப்ரவரி 18-ந்தேதி**
**சாம்பல் புதன் முதல்**
**ஏப்ரல் 2-ந்தேதி வரை**
**ஒவ்வொரு நாளும்**
**மாலை 6.30 மணி முதல்**
**இரவு 8.30 மணி வரை**



- அபிஷேகம் நிறைந்த ஆராதனை
- வல்லமையான ஜெபம்
- சத்திய வார்த்தை

PASTOR OSBORNE JEBADURAI

இடம்: ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்
#.50, இரயில்வே ஸ்டேஷன் ரோடு, கோடம்பாக்கம் - 24
+919003067777,+919884908777,+919884916777

Date of Publication on Last Week of Previous Month
REGISTRAR OF NEWSPAPER FOR INDIA
TNTAM/2006/17835
Posted on 19th & 20th at RMS/1
Patrica Channel, Egmore, Ch - 8.

பூமியின்மேல் அக்கினியைப் போடவந்தேன். அது இப்பொழுதே
பற்றி எரியவேண்டுமென்று விரும்புகிறேன். லூக்கா 12:49

அன்றன்றுள்ள அப்பம்
ஊழியங்கள்
நடத்தும்



44வது திருப்பத்தூர்

விடுதலை

# அக்கினி
# அபிஷேக முகாம்
# 2026

பதிவு கட்டணம்
₹200

**மே**
**14,15,16**

வியாழன், வெள்ளி
6 AM – 9 PM
சனிக்கிழமை
6 AM – 1 PM

- அபிஷேகம் நிறைந்த ஆராதனை
- வல்லமையான ஜெபம்
- சத்திய வார்த்தை

இடம்:
**அன்றன்றுள்ள அப்பம் ஜெப மண்டபம்**
கிறிஸ்துகுல ஆசிரமம், திருப்பத்தூர் மாவட்டம் வேலூர் அருகில்
தொடர்புக்கு : 044 24840407, 9003067777

மூன்று வேளையும் உணவு வழங்கப்படும்
தங்குமிடம் முன்பதிவிற்கு
9884916777 / 9003067777

If undelivered please return to:

**Elim Glorious Revival Church**
#50, Railway Station Road, Kodambakkam, Chennai - 600024, India
for 24X7 Prayer: 91-9444322200, 9444322211
Email: enquiry@elimgrc.com, Website: www.elimgrc.com